**மீதி இடமாற்றத்தின் மூலம் அதிக சேமிப்பு**

HSBC கிறெடிட் காா்ட் உங்களுக்கு அதிக சேமிப்பிற்கான வாய்ப்பை வழங்கும்! உங்கள் ஏனைய கிறெடிட் காா்ட்களிலுள்ள நிலுவைகளை உங்கள் HSBC கிறெடிட் காா்ட்டிற்கு இடமாற்றம் செய்து அதிக சேமிப்பை அனுபவிப்பதுடன், உங்கள் கிறெடிட் காா்ட் நிலுவைகளை ஒருங்கிணைப்பதற்கும் HSBC இன் மீதி இடமாற்றத் திட்டம் இடமளிக்கும்

**நான் எவ்வளவு தொகையை இடம்மாற்ற முடியும்?**

உங்கள் கிறெடிட் காா்ட் உச்சவரம்பின் 60% வரையான பணத்தில் நிலுவையைக் கழித்த பின்னா் எஞ்சுகின்ற இ.ரூ. 25,000 க்கு குறையாத தொகையை இடம்மாற்றலாம்.

**நான் என்ன செய்ய வேண்டும்?**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, உங்கள் மற்றைய வங்கிக் கிறெடிட் காா்ட்டின் மிகச் சமீபத்திய விபரக்கூற்றுடன் சோ்த்து எம்மிடம் சமா்ப்பியுங்கள்.

**நான் தெரிவுசெய்யக்கூடிய விருப்பத்தோ்வுகள் எவை?**

3 மாதங்களுக்கு 0% வட்டி. 6 மாதங்களுக்கு மாதாந்தம் 1% வட்டி

**குறிப்பாக நான் கொள்வனவு செய்யும்போது, தீா்ப்பனவு எவ்வாறு, எந்த ஒழுங்கில் நிகழும்?**

- பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கட்டணங்கள்
- பணக் கொடுக்கல் வாங்கல்கள்
- கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கட்டணங்கள்
- கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்
- தவணைமுறைத் திட்டங்கள் / பண மீதி இடமாற்றங்கள் (CBT) / பணத் தவணைமுறைத் திட்டங்கள் (CIP)

**உதாரணம்:** (பின்வருவது ஓா் எடுத்துக்காட்டான கணிப்பீடு மாத்திரமே).

3 மற்றும் 6 மாதங்களுக்கான ரூ.100,000 காா்ட் மீதி மாற்றத் திட்டம்

| **காலம்** | ஏனைய வங்கி கிறெடிட் காா்ட்டிலுள்ள நிலுவை | தெரிவுசெய்த காலப்பகுதியில் ஏனைய வங்கி அறவிடும் 24% வருட வட்டி | HSBC வட்டி | சேமிப்பு |
|---|---|---|---|---|
| **3 மாதங்கள்** | ரூ.100,000 | ரூ.6,000 | 0% | ரூ.6,000 |
| **6 மாதங்கள்** | ரூ.100,000 / | ரூ.12,000 | 1% - ரூ.6,000 | ரூ.6,000 |

மேலுள்ளது தற்காலிகக் கணிப்பீடு மட்டுமே. கொடுப்பனவுகள்/உங்கள் மற்றைய வங்கி பயன்படுத்தும் கணிப்பீட்டு நாட்களின் அடிப்படையில் இது மாறலாம்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 4 4722 11**

---

**மீதி இடமாற்ற விண்ணப்பப் படிவம்**

இந்த வேண்டுகோளை முன்னெடுத்துச் செல்ல இப் படிவத்தில் சகல விபரங்களையும் முறைப்படி நிரப்பவும்.

உங்கள் தனிப்பட்ட விபரங்கள்

திரு☐ திருமதி ☐ செல்வி ☐ டொக்டர்☐ வேறு (எதுவெனக் குறிப்பிடவும்) ............................

முழுப் பெயர் (மற்றைய வங்கி கிறெடிட் கார்ட்டில் உள்ளவாறு)

தொலைபேசி இலக்கம்: ............................................................

மின்னஞ்சல் முகவரி: ................................................................

**HSBC கிறெடிட் கார்ட் விபரங்கள்**

கார்ட் இல. ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

காலாவதியாகும் திகதி: ☐☐☐☐☐☐

**மற்றைய வங்கிக் கார்ட் விபரங்கள் (OBC)**

கார்ட் இல. ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

காலாவதியாகும் திகதி: ☐☐☐☐☐☐

OBC வழங்குநரின் பெயர்: ........................................................................

(சமீபத்திய OBC விபரக்கூற்றின் பிரதியொன்றை இணைக்கவும்)

இடம்மாற்ற வேண்டிய தொகை: ரூ. .................................................... (*விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும். குறைந்தபட்ச தொகை ரூ.25,000)

இடமாற்றத் தொகைக்கு விரும்பப்படும் திட்டம்

3 மாதங்களுக்கு 0% வருடாந்த வட்டியில் ☐

6 மாதங்களுக்கு 1% வருடாந்த வட்டியில் ☐

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

1. HSBC (வங்கி) தனது கிறெடிட் கார்ட் வாடிக்கையாளர்களின் வசதிக்காக, மீதி இடமாற்ற (BT) திட்டம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டத்தை வங்கி எந்த நேரத்திலும் தனது தனித் தீர்மானத்தின் பேரில் மீளப்பெறவோ திருத்தவோ முடியும்.

2. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் (3 மாதங்கள் அல்லது 6 மாதங்கள்), இடமாற்றம் செய்யப்படும் தொகைக்கு சலுகை வட்டி வீதம் (முறையே 0% அல்லது 1% ) அறவிடப்படும். HSBC கிறெடிட் கார்ட் தொடர்பான ஏனைய நிலுவைகள்/கொடுக்கல் வாங்கல்களுக்கு இந்த வட்டி வீதம் பொருத்தமாகாது.

3. உங்கள் கொடுப்பனவுகள் முதலில் BT நிலுவைகளையும், அதன் பின்பே வழமையான கிறெடிட் கார்ட் நிலுவைகளையும் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் என்பதைத் தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

4. கிறெடிட் வைத்திருப்பவரின் BT வேண்டுகோள் அங்கீகரிக்கப்படுமாயின், அவரால் வேறு விதமாகக் குறிப்பிடப்படாத பட்சத்தில், அவருக்கும் HSBC பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் BT கொடுக்கல் வாங்கலை நிறைவேற்ற HSBC க்கு வழங்கப்பட்ட அதிகாரமளிப்பாகக் கருதப்படும்.

5. கிறெடிட் கார்ட் வைத்திருப்பவரின் கடன் வரம்பெல்லையானது,, விண்ணப்பிக்கபட்ட BT தொகையை ஈடுசெய்வதற்குப் போதியதாக இல்லாவிட்டால், கோரப்பட்ட BT தாகையில் ஒரு பொருத்தமான பகுதியை மட்டும் அங்கீகரிப்பதற்கு HSBC தனது சுயவிருப்பின் பேரில் தீர்மானிக்க முடியும்.

6. BT வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அங்கீகரிக்கப்பட்ட BT தொகையானது அருகிலுள்ள HSBC அல்லாத கிறெடிட் கார்ட் கொடுப்பனவு நிலையத்திற்கு கிறெடிட் கார்ட் வைத்திருப்பவரின் சார்பில் வங்கியினால் செலுத்தப்படும்.

7. கிறெடிட் கார்ட் வைத்திருப்பவரின் HSBC அல்லாத கிறெடிட் கார்ட் கணக்கிற்கு உரிய திகதியில் கொடுப்பனவைச் செய்ய HSBC தவறுவதால் அல்லது தாமதிப்பதால் கிறெடிட் கார்ட் வைத்திருப்பவரின் நிலுவைக்கு மேலதிகமான ஏதேனும் கொடுப்பனவு,

ஏதேனும் தாமதக் கொடுப்பனவு, வட்டி அல்லது வேறு நிதி அறவீடுகள் தொடர்பில் கிறெடிட் கார்ட் வைத்திருப்பவருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் அல்லது அனைத்து இழப்புக்களுக்கு எதிராகவும் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கப்படும்.

8. BT தொகைக்காக எவ்விதமான ரிவோர்ட்ஸ் அல்லது மைலேஜ் ரிவோர்ட்ஸ் புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது.

9. வங்கியினால் வேறு விதமாகக் குறிப்பிடப்படாவிடின், BT வேண்டுகோள் விண்ணப்பமானது, வங்கிக்குக் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 3 வேலை நாட்களுக்குள் செயற்படுத்தப்படும்.

10. கிறெடிட் கார்ட் கணக்கின் கடன் வரம்பெல்லையானது,, கார்ட் மீதி இடமாற்றத் தொகையின் அளவுக்கேற்பக் குறைக்கப்படும் அல்லது வரையறை செய்யப்படும். அடுத்துவரும் மாதங்களில் மாதாந்தத் தவணைத் தொகைகள் பட்டியலிடப்பட்டு, செலுத்தப்பட்டதும் அது விடுவிக்கப்படும்.

11. கிறெடிட் கார்ட வைத்திருப்பவர் ஏதேனும் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறினால், நிலுவையாகவுள்ள கார்ட் மீதி இடமாற்றத் தொகையை முன்கூட்டியே நிறுத்தவும் நிலுவைத் தொகை முழுவதையும் கணக்கில் பற்று வைக்கவும் HSBC உரிமை கொண்டுள்ளது.

12. கிறெடிட் கார்ட நிலுவைக்கு மேலதிகமாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் எதுவும், பட்டியலிடப்படாத தவணைத் தொகைகளுக்கு எதிராகத் தன்னியல்பாகவே ஈடுசெய்யப்பட மாட்டாது. ஆகவே, அது கார்ட் மீதி இடமாற்றத் திட்டத்திற்கான முன்கொடுப்பனவாகக் அமையமாட்டாது.

13. கிறெடிட் கார்ட வைத்திருப்பவர் சகல தவணைத் தொகைகளையும் தனது கிறெடிட் கார்ட கணக்கிற்குச் செலுத்துவதற்கு முன்பே இந்த வசதியை நிறுத்திவிட்டால், நிலுவையாகவுள்ள மீதி இடமாற்றத் தொகையானது ஓர் ஒருங்கணைந்த மொத்தத் தொகையாகக் கிறெடிட் கார்ட கணக்கில் பற்று வைக்கப்படும்.

14. இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் அடங்கியுள்ள எதனையும், மேற்குறிப்பிட்ட வழங்கல் முடிவுறுத்தப்பட்ட பின்பும் மீதி இடமாற்றத் திட்டத்தைத் தொடர்ந்து வழங்க HSBCக்கு உள்ள கடப்பாடாக அர்த்தம் கொள்ள முடியாது.

15. மீதி இடமாற்றத் திட்ட வசதியைப் பயன்படுத்துவதால் கிறெடிட் கார்ட வைத்திருப்பவர் முகங்கொடுக்கும் அல்லது உள்ளாகும் ஏதேனும் சட்ட நடவடிக்கைகள், உரிமைக் கோரல்கள், கோரிக்கைகள், இழப்புக்கள், சேதங்கள், செலவுகள் மற்றும் அறவீடுகளுக்கு கிறெடிட் கார்ட வைத்திருப்பவர் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

16. இந்த வழங்கலுக்கான விதிகள், கிறெடிட் கார்ட வைத்திருப்பவரின் ஒப்பந்தத்திலுள்ள விதிகளுக்கு முரணானவையாக அல்லாமல் மேலதிகமானவையாக இருக்கும். இந்த வழங்கல் தெரிவு செய்யப்பட்ட கிறெடிட் கார்ட வைப்பாளர்களுக்காக வழங்கப்படும் ஒரு விசேட வசதியாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எதுவும் கிறெடிட் கார்ட வைத்திருப்பவரின் ஒப்பந்தத்திலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முரணாக அல்லது பாதிப்பாக அமையமாட்டாது.

**பிரகடனம்**

தற்போது நடைமுறையிலுள்ள மீதி இடமாற்றத் திட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளை நான் வாசித்து, விளங்கிக்கொண்டேன் எனவும் அவற்றிற்குப் பணிந்தொழுக இணங்குகிறேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

______________________________ __________________
கார்ட் வைத்திருப்பவரின் கையொப்பம் திகதி

---

**வங்கியின் பாவனைக்கு மட்டும்**

தரவுகளைச் சரிபார்த்தவர்: ☐

பதிந்தவர்: ______________________

திகதி: ______________________

கடன் வரம்பெல்லை: ______________________

O/S மீதி: ______________________

அங்கீகரிக்கப்பட்ட தொகை: ______________________

வங்கி அதிகாரியின் கையொப்பம்: ______________________

**FRONT**

இன்றே உங்கள் கார்ட்

மீதியை இடம்மாற்றி

அதிக சேமிப்பையும்

அதிக வசதிகளையும்

அனுபவியுங்கள்